உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## வாசிப்பு

### உயர் பிரிவு (தரம்10,11,12)

# விபுலானந்த அடிகள்.

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பில் காரைதீவு என்னும் ஊரிலே பிறந்தார்.

அவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மையார் ஆகும்.

விபுலானந்த அடிகளாரின் இயற்பெயர் மயில்வாகனன்.

அவர் தமிழ், ஆரியம் ஆகிய மொழிகளில் புலமையும் இலத்தீன், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார்.

இவர் பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியராகவும், விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும், தமிழ்ப் பண்டிதராகவும் விளங்கினார்.

இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், திருகோணமலை ஆங்கில கலாசாலையிலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தென் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

இவர் யாழ் நூல், நாச்சியார் நான்மணிக்கோவை, போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

தமிழ்ப்பொழில், ஸ்ரீராம கிருஸ்ண விஜயம் போன்ற சஞ்சிகைகளில் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார்.

யாழ் நூல், கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞான தீபம் என்பன அடிகளார் மொழி பெயர்த்த ஞான நூல்களாகும்.

நாடகத் தமிழ் வளர்ச்சிக்கு அடிகளார் தனது பங்களிப்பைச் செய்துள்ளார்.

ஆங்கிலம், ஆரியம் போன்ற மொழிகளின் புலமை நாடகத் தமிழ் நூலின் ஆக்கத்திற்கு பெரிதும் உதவியது.

1922ம் ஆண்டு துறவு பூண்டு 1924ம் ஆண்டு சித்திரை மாதம் பௌர்ணமியில் குரு தீட்சை பெற்று துறவியானார்.

குரு தீட்சை பெற்ற பின்னர் சுவாமி விபுலானந்தர் என அழைக்கப்பட்டார்.

1949ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் நாள் இவர் இறைவனடி சேர்ந்தார்.